IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

OS.No. 83 /2018

Deposition of witness for PW1

Name : சண்முகம்

Father Name : பொன்னுசாமி

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 21 day of April, 2023.

குறுக்கு விசாரணை

1. இவ்வழக்கு என்ன பரிகாரம் கோரி நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் நிலத்தில் பிரதிவாதிகள் ஆக்கிரமித்து கட்டியதற்காக இவ்வழக்கு போட்டுள்ளேன். வழக்கு சொத்து நிலமா என்றால் கிராம நத்தம் வீட்டுமனை பட்டா ஆகும். மேற்படி வீட்டுமனை பட்டா எவ்வாறு எனக்கு வழங்கப்பட்டது என்றால் அரசாங்கத்தால் வழங்கப்பட்டது. எவ்வளவு இடம் அரசு எனக்கு வழங்கியது என்றால் 350 சதுரமீட்டர். மேற்படி அரசு வழங்கியதாக கூறும் பட்டாவினை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

2. அரசு இலவச பட்டா வழங்கும் போது படிவம் எண்.4-ல் தான் வழங்குவார்கள் என்றால் அதுபோல எனக்கு பட்டா வழங்கவில்லை. எனக்கு வழங்கப்பட்டதாக சொல்லும் பட்டா எண் என்ன என்றால் 791 ஆகும். எனக்கு எத்தனை பட்டாக்கள் அரசு வழங்கியது என்றால் ஒரே ஒரு பட்டாதான். எந்த வருடம் பட்டா வழங்கப்பட்டது என்றால் 1993ம் வருடம். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ1 ஆனது 2017-ல் வழங்கப்பட்ட பட்டாவின் சான்றிட்ட நகல் தான் என்று சொன்னால் சாட்சி ஆவணத்தைப்பார்த்துவிட்டு சரிதான் என்று கூறுகிறார். அசல் பட்டாவினை நான் வங்கியில் கடன் பெறுவதற்காக அளித்துள்ளதாக சாட்சி தாமாக தெரிவிக்கிறார்.

3. மேற்படி கடன் பெறுவதற்காக பட்டாவை தவிர்த்து வேறு என்ன ஆவணங்களை வங்கியில் நான் கொடுத்துள்ளேன் என்றால் வீட்டுமனை பத்திரத்தின் அசலை கொடுத்துள்ளேன். அந்த வீட்டுமனை பத்திரம் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் என் பாட்டி காமாட்சியம்மாளுக்கு

பாத்தியப்பட்டது. மேற்படி காமாட்சியம்மாளின் வாரிசுகளிடமிருந்து தான் நான் வழக்கு சொத்தை கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். மேற்படி கிரையப்பத்திரத்தினை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றும், அந்த ஆவணம் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் பட்சத்தில் நான் எவ்வளவு சதுரடி இடம் வாங்கினேன் என்றும், அதன்படி எனக்கு எவ்வளவு சொத்திற்கு பாத்திய உரிமை உள்ளது என்று தெரியவந்திருக்கும் என்றும் சொன்னால் சரியல்ல. அசல் ஆவணத்தை வங்கியிடம் கடன் பெறுவதற்காக அளித்துவிட்டேன்.

4. எனக்கு இலவசமாக அரசு எந்த பட்டாவையும் வழங்கவில்லை என்றும், மோசடியாக வா.சா.ஆ1 இவ்வழக்கிற்காக தயார் செய்யப்பட்டு நான் தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. இவ்வழக்கின் உண்மையான ஆவணங்களை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்திருக்கும் பட்சத்தில் பிரதிவாதிகள் இவ்வழக்கில் நான் சொல்வது போல் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்களா இல்லையா என்பது தெரியவரும் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் காலங்காலமாக அங்கு வீடுகட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

5. பிரதிவாதிகள் அவர்களுக்கு உரிய இடத்தில் தான் வீடுகட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றும், இவ்வழக்கில் நான் சொல்வதுபோல் எந்த ஆக்கிரமிப்பும் பிரதிவாதிகள் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனவே இவ்வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை.

K VENKATESAN
Digitally signed by K VENKATESAN

DISTRICT MUNSIF
KATPADI.